செ.இ.எண்: 282 நாள்: 13-08-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை – 13.8.2012

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், வதியம் கிராமம் அருகே 8.8.2012 அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த வதியம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகன் என்பவரின் மகன் சரவணன் படுகாயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், பெத்தரெட்டிப்பட்டி விலக்கு அருகில் 10.8.2012 அன்று வேன் மீது அரசுப் பேருந்து மோதியதில், வேனில் பயணம் செய்த திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் வட்டம், தெற்கு கழுகுமலை கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரியப்பன் என்பவரின் மனைவி திருமதி தெய்வக்கனி மற்றும் திரு. தங்கராஜ் என்பவரின் மனைவி திருமதி சுப்புத்தாய் ஆகிய இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இச்சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த திரு. சரவணன், திருமதி தெய்வக்கனி மற்றும் திருமதி சுப்புத்தாய் ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விருதுநகர் மாவட்டம், பெத்துரெட்டிப்பட்டி விலக்கு அருகில் ஏற்பட்ட சாலை விபத்தில் 6 பேர் காயம் அடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், விருதுநகர் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவங்களில் காலமான திரு. சரவணன், திருமதி தெய்வக்கனி மற்றும் திருமதி சுப்புத்தாய் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், விருதுநகர் மாவட்டம், பெத்துரெட்டிப்பட்டி விலக்கு அருகில் ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.